பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 30 சனிக்கிழமை 16.10.2021 கதிர் 208

## நாவலப்பிட்டி இளைஞர் விபத்தில் பரிதாபச் சாவு

வட்டவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரோலினா பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நாவலப்பிட்டி பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய எந்தனி டொமினிக் என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று வட்டவளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

2

## மருதானை, முகத்துவாரத்தில் 4 பொலிஸார் மீது தாக்குதல்!

கொழும்பு மாவட்டத்தில் மருதானை மற்றும் முகத்துவாரம் பகுதிகளில் நான்கு பொலிஸ் அதிகாரிகள் மீது இன்று தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன.

மருதானை, கின்சி வீதியில் பயணித்த ஒருவரிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டபோது குறித்த நபர் பொலிஸ் அதிகாரிகளைக் கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளார்.

அவரைக் கைதுசெய்த பொலிஸார், மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, இன்று காலை முகத்துவாரம் பகுதியில் இரவு ரோந்துப் பணி முடித்து விட்டு திரும்பிக் கொண்டிருந்த இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்களை சந்தேகநபர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளார்.

காயமடைந்த இரண்டு பொலிஸ் அதிகாரிகளும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் தாக்குதல் நடத்திய சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## ரஷ்யாவின் போர்க்கப்பல் கொழும்பு துறைமுகத்தில்




இரு நீர்மூழ்கிக் கப்பல்களும் வந்தன

ரஷ்ய நாட்டு கடற்படைக்குச் சொந்தமான இரண்டு நீர்மூழ்கிக் கப்பல்களும், போர்க் கப்பல் ஒன்றும் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளன.

2

# இரண்டு போராட்டங்களுக்கும் சகலரும் ஆதரவு தர வேண்டும்

## சுமந்திரன் எம்.பி. கோரிக்கை



வடக்கு, கிழக்கில் விவசாயிகள் மற்றும் மீனவர்கள் ஆகியோர் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கோரி நாளையும் மறுதினமும் நடைபெறவுள்ள இரண்டு கவனவீர்ப்புப் போராட்டங்களுக்கும் அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் இன்று ஊடகங்களிடம் தெரிவித்தார்.

2

## வடக்கு மாகாண மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் முக்கிய கவனம்

### புதிய ஆளுநர் ஜீவன் உறுதி



இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் வடக்கு மாகாண மீனவர்கள் எதிர்நோக்கும்பிரச்சினைகள்தொடர்பில் முக்கிய கவனம் செலுத்துவேன். இதற்குத்தீர்வுகாண இலங்கை மீன்பிடி அமைச்சர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோருடன் நான் பேசுவது மட்டுமன்றி அவர்களூடாக இந்திய மத்திய அரசுடனும் பேசுவேன்.

- இவ்வாறு வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

2

## முல்லையில் துஷ்பிரயோகத்துக்குள்ளான இரு சிறுமிகள் யாழ்.போதனாவில் அனுமதி

தாயின் மூன்றாவது கணவரால் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்பட்ட தாயின் முதல் தாரங்களின் இரு பெண் பிள்ளைகள் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

முள்ளிவாய்க்கால் வட்டுவாகல் பகுதியில் வசிக்கும் பெண்ணொருவர் தற்போது மூன்றாவது கணவருடன் குடும்பம் நடத்தி வருகின்றார். அவரின் முதல் தாரங்களின் இரண்டு பெண் பிள்ளைகளும் தாயுடன் வாழ்ந்து வந்தனர்.

அந்நிலையில், தாயின் தற்போதைய கணவரால் இரண்டு பெண் பிள்ளைகளும் கடந்த

2

## வவுனியாவில் மேலும் 32 பேருக்குத் தொற்று; 24 வயது யுவதி உட்பட மூவர் பரிதாப மரணம்!

**(வவுனியா நிருபர்)**

வவுனியாவில் மேலும் 32 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமையுடன், 24 வயது யுவதி உட்பட மூவர் மரணமடைந்துள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் தனிமைப்படுத்தப்பட்டோர் ஆகியோரிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளின் முடிவுகள் சில இன்று காலை வெளியாகின.

அதில் வவுனியா மாவட்டத்தின் நான்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளையும் உள்ளடக்கியதாக 32 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களைக் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மேலும், கொரோனாத் தொற்று காரணமாக எந்தவித தடுப்பூசியையும்

2

## யாழில் 3 நாள் வேட்டையில் பலர் சிக்கினர்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த 3 நாள்களாக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் போதைப்பொருள்களை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து 10 கிராமுக்கும் மேற்பட்ட ஹெரோயின் போதைப் பொருள்களும் மீட்கப்பட்டன.

இதில் கொழும்பில் இருந்து யாழ் வந்து, யாழ். நகரப் பகுதியில்

2

## யாழில் 3 நாள் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தங்கியிருந்து ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்டு வந்த கெப்பிட்டிகோலாவ பகுதியைச் சேர்ந்த 58 வயதுடைய நபர் ஒருவர் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட வேளை அவரிடம் இருந்து 2 கிராம் 500 மில்லி கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டது.

மேலும், யாழ் குருநகர் பகுதியில் ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்டு வந்த 38 வயதுடைய நபர் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டு சோதனையிட்டவேளை அவரிடம் இருந்து 2 கிராம் 400 மில்லிகிராம் ஹெரோயின் மீட்கப்பட்டது.

யாழில் இருந்து கொழும்புக்குச் சென்று ஹெரோயின் போதைப்பொருள்களை விற்பனைக்காக வாங்கி வந்த நபர் தொடர்பில் பெறப்பட்ட தகவலின் அடிப்படையில் பொம்மைவெளி பகுதியில் உள்ள குறித்த நபரின் வீடு மாவட்ட குற்றத்தடுப்புபிரிவின் போதைப்பொருள் தடுப்புபிரிவினரால் சுற்றிவளைக்கப்பட்டதுடன் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் அவரின் உடமையில் இருந்து 5 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

விசாரணையில் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் முக்கிய சூத்திரதாரிகள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்வதற்காக கைதான நபர்களை மேலும் 5 நாள்கள் பொலிஸ் தடுப்பில் வைத்து விசாரணைகள் மேற்கொள்ள நீதிமன்ற அனுமதி கோரப்பட்டிருந்தது.

வழக்கை விசாரித்த யாழ். நீதிவான் பீற்றர் போல் அவர்களை மேலும் 5 நாள்கள் பொலிஸ் தடுப்பில் வைத்து விசாரணைகள மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கும்படி பொலிஸாருக்கு அனுமதியளித்தார்.

யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவின் போதைத்தடுப்புப் பிரிவினரின் நடவடிக்கைகளால் போதைப்பொருள் வர்த்தகர்கள் கைதுசெய்யப்பட்டு தடுப்பில் வைக்கப்பட்ட நிலையில் கொழும்பில் இருந்து போதை விற்பனையில் ஈடுபடும் நபர்கள் தற்போது குறித்த பிரிவினரால் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில் மேலும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பெற்றுக்கொள்ளாத நெடுங்கேணி பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய பெண் ஒருவரும், சாஸ்திரிகூழாங்குளம் பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய ஆண் ஒருவரும், உக்குளாங்குளம் பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய ஆண் ஒருவரும் என மூவர் மரணமடைந்துள்ளனர்.

மரணித்தவர்களின் சடலங்களை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (100)

## இரண்டு போராட்ட .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இழுவைப் படகு தடைச் சட்டத்தை முறையாக அமுல்படுத்துமாறு கடற்தொழில் நீரியல்துறை அமைச்சரைக் கோரி நாளை ஞாயிற்றுக்கிழமை முல்லைத் தீவிலிருந்து பருத்தித்துறை வரை கடல் வழியாக நடைபெறவுள்ள எதிர்ப்புப் பேரணிக்கு அனைத்துத் தரப்பினரும் ஆதரவு நல்க வேண்டும்,

இதேவேளை, நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள உரம் மற்றும் கிருமிநாசினி பற்றாக்குறை விவசாயிகளையும் தோட்டத் தொழிலையும் மிக மோசமாகப் பாதித்திருக்கின்றது. வடக்கிலும் கிழக்கிலும் பெரும்போக நெற் பயிர்ச்செய்கை தற்போது ஆரம்பமாகியுள்ளது. ஓரிரு வாரங்களுக்குள் பசளை மற்றும் கிருமி நாசினி அத்தியாவசியமாக தேவைப்படும். இந்தத் தேவையை உடனடியாகப் பூர்த்தி செய்யுமாறு கோரி வடக்கு, கிழக்கிலுள்ள சகல கமநல சேவைகள் மையங்களுக்கூடாக எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆர்ப்பாட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றன.

கொரோனாத் தொற்று காரணமாக சிறிய எண்ணிக்கையானவர்கள், சமூக இடைவெளிகளைப் பேணி இப்போராட்டத்தில் ஈடுபடுவார்கள். பல இடங்களில் ஒரே நேரத்தில் நடைபெறவிருக்கும் இந்த ஆர்ப்பாட்டங்களுக்கு அனைவரும் ஆதரவு அளிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன் - என்றார்

## வடக்கு மாகாண .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இணையதளத்துக்கு வழங்கிய காணொலி நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எனது பதவிக்காலத்தில் வடக்கு மாகாணத்தில் வாள்வெட்டுச் சம்பவங்களுக்கு - கத்திவெட்டுச் சம்பவங்களுக்கு ஒரு போதும் இடமில்லை. ஆள்களின் கை, கால் வெட்டுவதற்கு இடமில்லை. வாள் வெட்டு மற்றும் கத்திவெட்டுச் சம்பவங்களுக்கு முடிவு கட்டியே தீருவேன்.

இந்த அடாவடிகளில் யாராவது ஈடுபட்டால் அவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுப்பேன்.

இதேவேளை, வடக்கு மாகாணத்தின் கல்வி வளர்ச்சி தொடர்பில் அதிக கரிசனை செலுத்துவேன்.

பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகளை இனங்கண்டு அதற்கான தீர்வை வழங்க நடவடிக்கை எடுப்பேன் - என்றார்.

## முல்லையில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
12ஆம் திகதி துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

அது தொடர்பில் அயலவர்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதை அடுத்து, பொலிஸார் தாய் மற்றும் தாயின் மூன்றாவது கணவர் ஆகியோரைக் கைது செய்தமையுடன், துஷ்பிரயோகத்துக்குள்ளான இரு பெண் பிள்ளைகளையும் மீட்டு வைத்தியசாலையில் சேர்த்தனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரையும் விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் கடந்த 13ஆம் திகதி முற்படுத்தப்பட்டதை அடுத்து , நீதிமன்று அவர்கள் இருவரையும் எதிர்வரும் 25ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளது.

அதேவேளை, துஷ்பிரயோகத்துக்குள்ளான இரு பெண் பிள்ளைகளும் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## ரஷ்யாவின் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கப்பல்சார் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக, வெளிவிவகார அமைச்சின் அனுமதியுடன் அந்தக் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்துள்ளன.

சேவைகளைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், அந்தக் கப்பல்கள் நாளைமறுதினம் கொழும்புத் துறைமுகத்திலிருந்து வெளியேறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாவலப்பிட்டி இளைஞர் ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியில் வட்டவளை கரோலினா பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் வீதியில் வழுக்கி விபத்துக்குள்ளாகியுள்ளது.

வட்டவளை வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த உயிரிழந்தவரின் சடலம், பிரேத பரிசோதனைக்காக நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு இன்று கொண்டு செல்லப்பட்டது.

பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து சம்பவம் தொடர்பில் வட்டவளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com




**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

**076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சாத்தியமற்ற எதிர்பார்ப்பு

மாற்றம் ஒன்றே மாறாதது. அதுதான் உலக நியதி. அரசியல்வாதிகளும் அதை புரிந்துகொள்ள வேண்டும். மாற்றம் தவிர்க்க முடியாதது.

“நான் வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராகக் களத்தில் குதிக்கத் தயாராக இருக்கிறேன்” எனத் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், வடக்கு மாகாணசபையின் முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் நேற்று அறிவித்துள்ளமையை நோக்கும்போது உலகம் மாறிக் கொண்டிருக்கின்றது என்ற யதார்த்தப் புற நிலைமையை உணராமல் அவர் இப்படி கூறுகின்றாரோ என்றுதான் சிந்திக்க வேண்டி ஏற்படுகின்றது.

நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் தாமாக ஒரு பதிலை – விருப்பை – எதிர்பார்ப்பை – இப்படிக் கோடி காட்டியிருப்பார் என்று நாம் நம்பவில்லை. செய்தியாளர்கள் யாரேனும் தூண்டில் போட்டு விரித்த வலையில் சிக்கிப் பதிலளிக்கையில் அவர் இப்படி கூறி இருக்கலாம் என்றே தோன்றுகிறது.

விக்னேஸ்வரன் மட்டுமல்லர், இலங்கையில் வாக்காளர்களாகத் தகுதி பெற்ற எவரும் வடக்கின் முதல்வராகக் களமிறங்க நான் தயார் என்று அறிவிக்க முடியும். அதுதான் ஜனநாயகத்தின் தாராளம். அப்படி அறிவிப்பதும் தப்பில்லை. ஆனால் மூத்த அரசியல் தலைவர் ஒருவர் யதார்த்தம் புரியாமல் இப்படி அரசியல் பேசக்கூடாது. பேசினால் அது நகைப்புக்கிடமாகிவிடும்.

சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது என்பார்கள்.

இங்கு வடக்கு மாகாண முதல்வர் பதவியில் அமர்ந்து சூடு கண்டவர் நீதியரசர் விக்னேஸ்வரனா அல்லது எங்கோ இருந்த அவரை ‘சம்பந்தன் அண்ட் கோ’ வற்புறுத்தி அரசியலுக்கு இழுத்து வந்து, வடக்குத் தமிழர்கள் மீது முதலமைச்சராகக் கட்டியடிக்க சூடு கண்டவர்கள் வடக்கு தமிழரா என்பதை அவரவர்களே தீர்மானித் துக் கொள்ளட்டும்.

ஆனால் நீதியரசர் விக்னேஸ்வரனைப் பொறுத்தவரை அவரது நிலைமை எட்டு ஆண்டுகளுக்கு முன்பு அவர் சம்பந்தன் அணியினரால் அரசியலுக்கு இழுத்து வரப்பட்ட கள நிலைமையில் தாம் இப்போது இல்லை என்பதை அவர் உணராமல் இருக்கின்றமை நகைப்புக்கிடமானது. யதார்த்த அரசியல் கள நிலைமையை அவர் புரிந்து – உணர்ந்து – கொண்டிருப்பாரேயானால் அவர் இப்படிக் கருத்து வெளியிட்டிருக்க மாட்டார்.

எல்லாத் தமிழ்த் தேசியத் தலைவர்களும் ஒன்றிணைந்து அழைத்தால் தான் முதல்வர் வேட்பாளராக வருவேன் என்று நீதியரசர் விக்னேஸ்வரன் நிபந்தனை விதித்த காலம் ஒன்று இருந்தது. இன்று அது மலையேறி விட்டது.

இப்போது அவர் கெஞ்சிக் கேட்டாலும் அவருடன் கூட்டமைத்து நிற்கும் இரண்டு, மூன்று தமிழ்த் தலைவர்களை தவிர, வேறு யாரும் அவர் பக்கமே திரும்பிப் பார்க்க மாட்டார்கள் என்பதுதான் கள யதார்த்தம். அந்த நிலைமை புரியாமல் அவர் இப்படிப் பேசுகின்றார் என்று எண்ணத் தோன்றுகின்றது.

ஒரு லட்சத்து 30 ஆயிரம் விருப்பு வாக்குகளுடன் பெருவெற்றியீட்டி அவர் முதலமைச்சரான காலம் வேறு. கடந்த பொதுத் தேர்தலில் எம்.பி. பதவிகளுக்கு ஒதுக்கி, மிச்சம் வந்த வாக்குகளில் தட்டுத்தடுமாறி – தொத்துப் பொறியில் – எம்.பியான அவரின் காலம் வேறு.

பொதுத் தேர்தலுக்குப் பின்னர் தமது கூட்டமைப்புக் கட்சிகளின் கூட்டங்களில் பங்குபற்றிய அவர், தமது தமிழ் மக்கள் கூட்டணி என்ற கட்சியின் ஒரு கூட்டத்தைக் கூட இன்னமும் கூட்டவே இல்லை என்று சில வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன. இந்தச் சூழலில் “உங்கள் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இணைந்து அழைத்தால் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடுவதை எனது கடமையாக ஏற்றுக் களம் இறங்குவேன்” என்று அவரது இப்போதைய பேச்சு வெறும் நப்பாசையின் வெளிப்பாடே தவிர காரிய சாத்தியமானதல்ல என்பதுதான் உண்மை நிலைமையாகும்.



## நீர்கொழும்பு களப்பு அபிவிருத்தி பிரச்சினைகளுக்கு துரித தீர்வு!

### பெற்றுக் கொடுக்க டக்ளஸ் நடவடிக்கை

நீர்கொழும்பு களப்பு அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துகையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பிலான விசேட கலந்துரையாடல் கடற்றொழில் அமைச்சின் கேட்போர் கூடத்தில் கடந்த வியாழக்கிழமை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் களப்பு அபிவிருத்தித் திட்டம் முன்னெடுக்கப்பட்ட போது, ஒருசில கடற்றொழில் அமைப்புகளும் பிரதேச மக்களும் களப்பிற்குச் சொந்தமான, கண்டல் தாவரங்கள் வளர்க்கப்படாத ஒரு பகுதியை மைதானமாகப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்குமாறு கோரிக்கை முன்வைத்தனர்.

அதேவேளை, அபிவிருத்தித் திட்டத்தால் கடலுக்கும் களப்பிற்கும் பாதுகாப்பை ஏற்படுத்தும் கண்டல் தாவரங்கள் அழிக்கப்படுகின்றன எனவும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டமையால், களப்பு அபிவிருத்தி பணிகள் தடைப்பட்டுள்ளன.

இந்த விவகாரங்கள் தொடர்பாக வியாழன் இடம்பெற்ற கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த, அபிவிருத்தித் திட்டத்துக்குப் பொறுப்பான பிரதம பொறியியலாளர், நீர்கொழும்பு களப்பு பிரதேசமாக வர்த்தமானியின் மூலம் அறிவிக்கப்பட்ட பகுதிகளில் தற்போது, கண்டல் தாவரங்கள் பரவி வியாபித்திருப்பதன் காரணமாக அப்பகுதிகளை களப்பை சுற்றியுள்ள கண்டல் தாவரங்கள் வன பாதுகாப்பு திணைக்கள கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதால் அப்பகுதியை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்த முடியாதெனவும் அதற்குப் புறம்பாக ஏதேனும் வாய்ப்புக்கள் இருப்பின் அதனை பெற்றுக் கொடுப்பது தொடர்பாக அவதானம் செலுத்த முடியுமெனவும் தெரிவித்தார்.

கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்ட விடயங்களை உன்னிப்பாக அவதானித்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நீர்கொழும்பு களப்பு அபிவிருத்திப் பணிகளை விரைவில் முடிக்க வேண்டுமெனவும் அதற்குத் தடையாகவுள்ள விடயங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அனைவரும் இணைந்து கள விஜயமொன்றை மேற்கொண்டு, பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு உரிய நடவடிக்கைள் மேற்கொள்ளப்படுமெனவும் அதன் ஊடாகத் திட்டப் பணிகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குகிறேன் எனவும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் கடற்றொழில் அமைச்சின் செயலளர் திருமதி இந்து இரத்நாயக்க, நீர்கொழும்பு நகர மேயர் லன்ஸா, கடற்றொழில் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த, வன பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள், கம்பஹா மாவட்டத்துக்கான பொலிஸ் அத்தியட்சகர், நீர்கொழும்பு பிரதேச செயலாளர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

## வெளிமாவட்ட மாணவர்களுக்கும் 21 முதல் தடுப்பூசி செலுத்தும் பணி

18–19வயதுக்குஇடைப்பட்டவர்களுக்கான தடுப்பூசி செலுத்தும் பணிகள் கொழும்பு மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், ஏனைய மாவட்டங்களில் இம்மாதம் 21 ஆம் திகதிமுதல் இந்தப் பணிகள் ஆரம்பமாகும் என சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார். வீடியோ தொழில்நுட்பத்தின் ஊடாக இடம்பெற்ற கொரோனா ஒழிப்புச் செயலணிக் கூட்டத்தின் போதே, அவர் இதனைக் கூறியுள்ளார்.

அந்தவகையில், ஏனைய மாவட்டங்களிலுள்ள 18–19 வயதுப் பிரிவைச் சேர்ந்த அனைத்துப் பிள்ளைகளுக்கும், இம்மாதம் 21 ஆம் திகதி முதல், பாடசாலைகள் மற்றும் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் ஊடாகத் தடுப்பூசி ஏற்றுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சுகாதாரத் துறையினரின் பரிந்துரைகளுக்கு அமைவாக, பாடசாலை மாணவர்களுக்கு ஒரு டோஸ் தடுப்பூசியும் விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கு இரண்டு டோஸ்தடுப்பூசிகளும்செலுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கடந்த ஓராண்டில் ஒரு வாரத்தில் ஏற்பட்ட மிகக் குறைவான மரணம்

உலக அளவில் கொவிட் தொற்றால் ஏற்பட்ட உயிரிழப்போர் எண்ணிக்கை கடந்த ஓராண்டில் இல்லாத அளவுக்கு கடந்த வாரத்தில் குறைந்துள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

உலக சுகாதார அமைப்பின் செயலாளர் நாயகம் டெட்ரோஸ் அதானோம் கெப்ரியாசிஸ், வாராந்திர ஆய்வு குறித்து அளித்த பேட்டியில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உலகஅளவில்கொவிட்பெருந்தொற்றால் உயிரிழப்போர் எண்ணிக்கை தொடர்ந்து குறைந்து வருகிறது.

கடந்த வாரத்தில் உலக அளவில் 50 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். இது, கடந்த ஓராண்டில் ஒரு வாரத்தில் ஏற்பட்ட மிகக் குறைவான உயிரிழப்பு.

ஐரோப்பாவைத் தவிர்த்து உலகின் பல்வேறு நாடுகளிலும் கொவிட் தொற்றால் உயிரிழப்போர் எண்ணிக்கை குறைந்து வருகிறது. ஆனால் பல நாடுகள் தற்போது புதிதாக கொவிட் அலைகளையும், உயிரிழப்பையும் சந்தித்து வருகின்றன. குறிப்பாக, குறைவான அளவு தடுப்பூசி செலுத்திய மக்கள் இருக்கும் நாடுகளில் உயிரிழப்பு அதிகரித்து உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# கத்திக்குத்துக்கு பலியானார் பிரிட்டிஷ் எம்.பி.

பிரித்தானியாவின் நாடாளுமன்ற உறுப்பினர் சேர் டேவிட் அமேஸ் கத்திக்குத்து தாக்குதலில் பலியாகியுள்ளார்.

கொன்சர்வேடிவ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான சேர் டேவிட் அமேஸ் கத்திக்குத்து தாக்குதலில் படுகாயம் அடைந்த நிலையில் உயிரிழந்தார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானிய நேரம் பகல் 12 மணியளவில் லீ–ஆன்–சீ–யில் சேர் டேவிட் அமேஸ் கத்தியால் குத்தப்பட்டார் என தமக்கு தகவல் கிடைத்ததாகவும் அதன் அடிப்படையில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் எஸ்ஸெக்ஸ் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதாகிய நபரிடம் இருந்து கத்தி பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும், நாடாளுமன்ற உறுப்பினர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக தாம் வேறு எவரையும் தேடவில்லை எனவும் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

1983ஆம் ஆண்டு முதல் பிரித்தானியாவில் நாடாளுமன்ற உறுப்பினராக ஆக இருக்கும் டேவிட் அமேஸுக்கு ஐந்து பிள்ளைகள் உள்ளனர்.

பிரித்தானிய பிரதமர் பொரிஸ் ஜோன்சன் டேவிட் அமேஸின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில், அரசியலில் மிகவும் கனிவான, அழகான, மென்மையான மனிதர்களில் ஒருவர் டேவிட் அமேஸ். நாங்கள் இன்று ஒரு நல்ல பொது ஊழியர், மிகவும் பிரியமான நண்பர் மற்றும் சக சேவகரை இழந்துவிட்டோம், என குறிப்பிட்டுள்ளார்.



# கன்சர்வேடிவ் எம்.பி. கொல்லப்பட்டமை பயங்கரவாதம் என்கிறது பொலிஸ்



கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்த கன்சர்வேடிவ் நாடாளுமன்ற உறுப்பினர் சேர். டேவிட் அமேஸின் கொலை, பயங்கரவாத சம்பவம் என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இதில், 'இஸ்லாமிய தீவிரவாதத்துடன் தொடர்புடைய சாத்தியமான உந்துதல்' இருப்பதாக பெருநகர பொலிஸ்துறை தெரிவித்துள்ளது.

கொலைச் சந்தேகத்தின் பேரில் 25 வயதான பிரித்தானியர் ஒருவர் சம்பவ இடத்தில் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், இக்கொலை சம்பவம் தொடர்பில் வேறு யாரையும் தேடவில்லை என பொலிஸார் கூறியுள்ளனர்.

விசாரணையின் ஒரு பகுதியாக, அதிகாரிகள் லண்டன் பகுதியில் உள்ள இரண்டு முகவரிகளில் சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று பெருநகர பொலிஸ்துறை தெரிவித்துள்ளது.

குறித்த சந்தேக நபர் தனியாக செயற்பட்டார் என பொலிஸ்துறை நம்புகிறது, ஆனால், இதுதொடர்பான விசாரணைகளை பொலிஸார் தீவிரப்படுத்தியுள்ளனர்.

பிரித்தானிய நேரம் பகல் 12 மணியளவில் லீ–ஆன்–சீ–யில் சேர் டேவிட் அமேஸ் கத்தியால் குத்தப்பட்டார். 1983ஆம் ஆண்டு முதல் பிரித்தானியாவில் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் டேவிட் அமேஸுக்கு ஐந்து பிள்ளைகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிரித்தானிய எம்.பியின் மறைவு; தமிழ் அமைப்புக்கள் இரங்கல்!

தீவிரவாதச் சம்பவத்தில் கத்தியாவில் குத்தி நேற்று படுகொலை செய்யப்பட்ட பிரிட்டன் – செளத் எண்ட் வெஸ்ட் தொகுதி கன்சர்வேடிவ் எம்.பியும் தமிழர்களுக்கான அனைத்து கட்சி நாடாளுமன்ற குழுவின் உறுப்பினருமான சோ டேவிட் அமேஸுக்கு பிரித்தானிய தமிழர்கள் அஞ்சலி செலுத்தினர்.

பிரிட்டன் உள்ளூர் நேரப்படி நேற்று பகல் 12 மணியளவில் லீ–ஆன்–சீ. பகுதியில் உள்ள பெல்பேர்ஸ் தேவாலயத்தில் தமது தொகுதிவாசிகளைச் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தபோது டேவிட் அமேஸ் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டார்.

1983ஆம் ஆண்டு முதல் பிரிட்டனில் எம்.பியாக இருக்கும் டேவிட் அமேஸ் கொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதேவேளை, இத்தத் தாக்குதல் சம்பவம் ஒரு தீவிரவாத செயல் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொலை செய்யப்பட்ட டேவிட் அமேஸ் தமிழர்களுக்கான அனைத்து கட்சி நாடாளுமன்ற குழுவின் உறுப்பினராவார்.

விளையாட்டு மற்றும் கலாச்சார நிகழ்வுகள் உட்பட பிரித்தானிய தமிழ் சமூகத்தால் நடத்தப்படும் நிகழ்வுகளில் அமேஸ் அடிக்கடி கலந்து கொள்வார், மேலும் இலங்கையில் நடக்கும் தமிழர்களுக்கு எதிரான கொடுமைகளுக்கு எதிராக அவர் அடிக்கடி குரல் கொடுத்து வந்தார்.

2018 ஆம் ஆண்டில், சர்வதேச கட்டாய காணாமல்போனோர் தினத்தை முன்னிட்டு, அவர் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் உறுப்பினர்களை சந்தித்தார்.

இந்நிலையில் சோ டேவிட் அமேஸ் மறைவு புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும் என புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் இரங்கல் வெளியிட்டுள்ளன. தீவிரவாத சம்பவத்தில் கத்தியாவில் குத்தி நேற்று படுகொலை செய்யப்பட்ட பிரிட்டன் – செளத் எண்ட் வெஸ்ட் தொகுதி கன்சர்வேடிவ் எம்.பியும் தமிழர்களுக்கான அனைத்து கட்சி நாடாளுமன்ற குழுவின் உறுப்பினருமான சோ டேவிட் அமேஸுக்கு பிரித்தானிய தமிழர்கள் அஞ்சலி செலுத்தினர்.



# பெய்ரூட் துப்பாக்கிச் சூடு; ஆறு பேர் உயிரிழப்பு!

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் நடந்த போராட்டத்தில், நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் உயிரிழந்ததோடு 30க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என லெபனான் செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

பெய்ரூட் நகரின் துறைமுகத்தில் கடந்த ஆண்டு நடந்த மிகப்பெரிய வெடிப்பு சம்பவத்தை, விசாரித்த நீதிபதிக்கு எதிராக ஷியா முஸ்லிம் குழுக்கள் நேற்று முன்தினம் (வியாழக்கிழமை) நடத்திய போராட்டத்தின் போதே இந்த துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது. அதே நேரத்தில் நான்கு பி 7 ரொக்கெட்டுகள் வீசப்பட்டன.

இந்தநிலையில், துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்களுக்கு ஒரு நாள் துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது.

ஈரான் ஆதரவு ஹிஸ்புல்லா மற்றும் அதன் முக்கிய ஷியா கூட்டாளியான அமல் ஆகியோரின் நூற்றுக்கணக்கான ஆதரவாளர்கள், லெபனான் தலைநகரின் நீதி அரண்மனை நோக்கி அணிவகுத்துச் சென்றபோது, ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கூரையில் இருந்தவர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

ஹிஸ்புல்லா குழுவினர், ஒரு கிறிஸ்தவ பிரிவை குற்றம் சாட்டினார்கள், இருப்பினும் அந்தக் குழு குற்றச்சாட்டை மறுக்கிறது.

வன்முறையைத் தொடர்ந்து ஒன்பது பேர் கைது செய்யப்பட்டனர் என லெபனான் இராணுவம் வியாழக்கிழமை பிற்பகுதியில் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இலங்கைச் சிறையில் உள்ள தமிழக மீனவர்களை விடுவிக்கக் கோரி பிரதமருக்கு ஸ்டாலின் கடிதம்



இலங்கைக் கடற்படையால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ள 23 தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு இந்தியப் பிரதமருக்கு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக்கடிதத்தில் அவர், ‘இந்தியா, இலங்கை மீனவர்களுக்கு இடையேயான நீண்ட காலப் பிரச்சினையில் பிரதமர் உடனடியாகத் தலையிட வேண்டும். 23 மீனவர்களையும், மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்க இலங்கை அதிகாரிகளிடம் இந்திய வெளியுறவுத் துறை வலியுறுத்த வேண்டும். இலங்கைக் கடற்படையால் அப்பாவி மீனவர்கள் தாக்கப்படுவது ஆழ்ந்த கவலையை ஏற்படுத்துகிறது’ எனக்குறிப்பிட்டுள்ளார்.

நாகை மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 700க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீன்பிடிக்கச் சென்றவர்களில் எல்லை தாண்டி மீன்பிடித்தனர் என 23 மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் சிறைப்பிடித்தனர். அவர்களின் மூன்று படகுகளையும் பறிமுதல் செய்து காங்கேசன் துறைமுகத்தில் நிறுத்தி வைத்தனர்.

கைது செய்யப்பட்டிருந்த மீனவர்களுக்கு கொரோனாப் பரிசோதனை செய்யப்பட்டு, பருத்தித் துறை நீதிமன்றத்தில் அவர்கள் ஆஜர்படுத்தப்பட்டனர். வருகிற 28ஆம் திகதி வரை காரைநகர் கடற்படை முகாமில் மீனவர்களைத் தனிமைப்படுத்தி காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டுள்ளார். பறிமுதல் செய்யப்பட்ட படகுகள் மயிலிட்டி துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.



## உலகின் மிகப்பெரிய இராணுவச் சக்தியாக இந்தியாவை மாற்றுவோமென மோடி தெரிவிப்பு

உலகிலேயே மிகப்பெரிய இராணுவ சக்தியாக நம் நாட்டை மாற்றுவதே தற்சார்பு இந்தியா திட்டத்தின் நோக்கம் என இந்தியப் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். இந்திய அரசுக்குச் சொந்தமான 7 புதிய இராணுவ தளவாட உற்பத்தி நிறுவனங்களை காணொலி வழியான நிகழ்வில் நாட்டுக்கு அர்ப்பணித்து அவர் உரையாற்றியிருந்தார்.

இராணுவத் தளவாட உற்பத்தி வாரியத்தின் கீழ் இயங்கி வந்த தளவாடத் தயாரிப்புப் பணிகள் இனி அரசுக்குச் சொந்தமான வணிக ரீதியான 7 தொழில் நிறுவனங்களின் கீழ் நடைபெறவுள்ளன. இதற்காக உருவாக்கப்பட்டுள்ள 7 புதிய நிறுவனங்களை விஜயதசமி நாளில் இந்தியப் பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணித்தார். முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமின் 90 ஆவது பிறந்த நாளையொட்டி அவருக்கு அஞ்சலியும் செலுத்தினார். அப்போது உரையாற்றிய அவர், அரசு தொடங்கியுள்ள 7 புதிய நிறுவனங்கள் கலாமின் கனவுகளை நனவாக்கும் என்றும் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் இந்தியப் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இந்த நிகழ்வில் தமிழகத்தின் திருச்சியிலுள்ள துப்பாக்கித் தொழிற்சாலையில் பணியாற்றுபவர்களும் காணொலி முறையில் பங்கேற்றனர்.

## ஐ.நா. மனித உரிமை சபைக்குத் தலைமை மேலும் 3 ஆண்டுகளுக்கு இந்தியா தொடரும்





ஐ.நாவின் மனித உரிமைகள் சபைக்கு சுழற்சி முறையில் ஒவ்வொரு நாடும் 3 ஆண்டுகளுக்கு தலைமை வகிப்பது வழமை.

இதற்கான தேர்தல் ஐ.நா. பொதுச் சபையில் நேற்று நடைபெற்றது. 193 உறுப்பு நாடுகளில், தலைமை வகிக்கும் பொறுப்பை இந்தியாவுக்கு வழங்க 184 நாடுகள் ஆதரவு அளித்து வாக்களித்தன.

97 வாக்குகள் பெற்றாலே போதுமென்ற நிலையில், அதிகளவு பெரும்பான்மைப் பலத்துடன் இந்தியா மீண்டும் தெரிவாகியுள்ளது.

இதைத் தொடர்ந்து, டுவிட்டரில் பதிவிட்ட ஐ.நாவுக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி திருமூர்த்தி, மனித உரிமை சபைக்கு இந்தியாதலைமைதாங்குவதற்கு அதிகப்படியான ஆதரவு கிடைத்திருப்பது மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாகக் கூறியுள்ளார். இந்தியாவுக்கு ஆதரவளித்த அனைத்து நாடுகளுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் எனவும் அவர் கூறியுள்ளார். இந்தியாவின் தற்போதைய பொறுப்பு இந்த ஆண்டு முடிவடையவிருக்கும் நிலையில், மீண்டும் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு அந்தப் பதவியில் இந்தியா தொடரவுள்ளது.

## அ.தி.மு.க. பொன்விழா ஆண்டு நிகழ்வுகளுக்காக நினைவிடங்களில் 3,000 பொலிஸார் பாதுகாப்பு



அ.தி.மு.க. பொன்விழா ஆண்டை முன்னிட்டு சென்னை மெரினா கடற்கரையில் உள்ள தலைவர்கள் நினைவிடங்களில் மூவாயிரம் பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அ.தி.மு.கவின் பொன்விழாவை முன்னிட்டு, சென்னை மெரினா கடற்கரையில் உள்ள ஜெயலலிதா நினைவிடத்தில் அவரது தோழி சசிகலா மரியாதை செலுத்தவுள்ளார். அதேபோன்று தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி ஆகியோரும் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா நினைவிடங்களில் மரியாதை செலுத்தவுள்ளதால் சசிகலா சார்பிலும், அ.தி.மு.க. சார்பிலும் பொலிஸ் பாதுகாப்புக் கோரி மனுக்கள் அளிக்கப்பட்டன.

இதையடுத்து, இன்றும் நாளையும் தலைவர்கள் நினைவிடங்களில் மூவாயிரம் பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றன என தமிழக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவில் தொடர்ந்து எட்டாவது நாளாக 20,000 க்கும் குறைவான தினசரித் தொற்று

இந்தியாவில் தொடர்ந்து எட்டாவது நாளாக 20,000 க்கும் குறைவான நபர்களுக்கு கொரோனா உறுதியாகியுள்ளது. அதன்படி கடந்த 24 மணிநேரத்தில் புதிதாக 15,981 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் இதுவரை தொற்று உறுதியானவர்கள் எண்ணிக்கை 3,40,53,573 என்றாகியுள்ளது.

கொரோனாவிலிருந்து குணமடைவோர் எண்ணிக்கை 98.08% ஆக உயர்ந்துள்ளது. இது கடந்த மார்ச் 2020 முதலான தரவுகளில் மிக உயர்ந்த வீதமாகும். கடந்த 24 மணி நேரத்தில் 17,861 பேர் இந்தியளவில் கொரோனாவிலிருந்து மீண்டுள்ளனர். இதன்மூலம் இதுவரை குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 3,33,99,961 ஆக உயர்ந்துள்ளது. இதுவரை 58.98 கோடி கொரோனா பரிசோதனைகள் இந்தியாவில் செய்யப்பட்டுள்ளன என்றும், அவற்றில் கடந்த 24 மணி நேரத்தில் 9,23,003 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் சுகாதாரத்துறைத் தரப்பினால்தரவுகள் வெளியிடப்பட்டுள்ளன. 97.23 கோடி தடுப்பூசி டோஸ்கள் செலுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொரோனாவால் உயிரிழப்போர் வீதம் 1.33% ஆக உள்ளதாகவும், கடந்த 24 மணி நேரத்தில் 166 பேர் கொரோனாவினால் பலியாகியுள்ளனர் என்றும், இதுவரை இந்தியாவில் கொரோனாவால் இறந்தவர்கள் எண்ணிக்கை 4,51,980 ஆகப் பதிவாகியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# வாயினால் மாத்திரமே வேலை செய்கிறார் டக்ளஸ் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் குற்றசாட்டு



அமைச்சர் டக்ளஸ் வாயினால் மாத்திரமே அமைச்சருக்கான வேலையினை செய்கின்றார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஊடாக, வாழைச்சேனையில் வாழ்வாதார உதவிகளை வழங்கியதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தமிழக மீனவர்களின் அத்துமீறிய செயற்பாடுகள் காரணமாக வட பகுதி மீனவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். வட பகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் முழுமையாக அழிவடைந்து வருகின்றது.

இதற்குரிய காரணம் எங்களது மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வாயினால் மாத்திரமே அமைச்சருக்கான வேலையினை செய்கின்றார். அவருடைய வேலையினை அவர் பார்ப்பது இல்லை. கடந்த ஒரு வருடமாக நான் அவரிடம் முன்வைத்தஎந்தக்கோரிக்கையினையும் அவர் நிறைவேற்றவில்லை. நாடாளுமன்றத்தில் அதை செய்கின்றேன். இதை செய்கிறேன் என தெரிவிப்பார். ஆனால் இதுவரை இந்திய மீனவர்களை தடுக்க முடியாத நிலையில் உள்ளார். உண்மையிலேயே இந்த அரசாங்கம் புத்திசாலித்தனமான அரசாங்கம். தமிழர் ஒருவரினை மீன்பிடி அமைச்சராக நியமித்து, தமிழகத்தில் உள்ள தமிழர்களையும் இலங்கையிலுள்ள தமிழர்களையும் மோதவிட்டு சிரித்துக் கொண்டு இருக்கின்றது. இதனை அமைச்சர் முதலில் உணர வேண்டும். அப்படி செய்ய முடியாவிட்டால் பதவியினை இராஜினாமா செய்ய வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.



# 5 மாதங்களின் பின் கிழக்கில் முன்பள்ளிகள் ஆரம்பமாகின

நீண்ட கொரோனா விடுமுறையையடுத்து, கிழக்கு மாகாணத்தில் முன்பள்ளிப் பாடசாலைகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சுகாதார நடைமுறை அவசியம் பின்பற்றப்பட்டு வருகின்றன.

கடந்த ஐந்துமாதகால கொரோனா விடுமுறையின் பின்னர் மீண்டும் கடந்த திங்களன்று முன்பள்ளிகள் கிழக்கில் திறக்கப்பட்டன.

கடந்த திங்களன்று குறித்த பாடசாலைகளை ஆரம்பிக்குமாறு கிழக்கு முன்பள்ளிவாரியம் விடுத்த வேண்டுகோளுக்கமைவாக சுகாதார முறைப்படி அவை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆரம்பமானநாள்முதலேகூடுதலான சிறுவர் சிறுமியர் பாடசாலைக்கு வருவதில் அதிக முனைப்புகாட்டினர். பெற்றோர்களும்அதிகஆர்வம்காட்டினர். நீண்டகாலமாக வீட்டில் அடைபட்டுக் கிடந்த சிறுவர்கள் குதூகலமாக பாடசாலைக்கு வருவதைக் காணமுடிந்தது.

சிறுவர்கள் கை கழுவுதலுடன் மாஸ்க் அணிந்து, சமூக இடைவெளியுடன் பழகுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. முன்பள்ளிகள் தோறும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சென்று மாணவர்களுக்கான அறிவுரைகளை தெளிவுபடுத்தி வருகின்றனர்.

காரைதீவு விபுலானந்தா மொன்ரிசோரி முன்பள்ளிப்பாடசாலையில், நேற்று முன்தினம் பிரதேச பொதுச் சுகாதாரபரிசோதகர் பாடசாலையில் கொரோனாத் தவிர்ப்பு செயற்பாட்டிற்காக சிறுவர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் எனும் அறிவுறுத்தல் செய்தியை வழங்கினார்.

கூடவே டெங்கு நோயின்தாக்கம் அதனை எவ்வாறு தவிர்த்துக்கொள்ளலாம்? என்பதையும் இலகுவான மொழிநடையில் அவர் விளக்கமாகக் கூறினார்.

பாடசாலையில்மேற்கொள்ளவேண்டிய சுகாதாரநடைமுறை விதிகளையும் அங்கு தெளிவாக அவர் எடுத்துக் கூறினார்.

# மாணவர் மக்கள் இயக்கத்தினால் கிழக்கில் சுவரொட்டிகள் ஒட்டல்




இலவச கல்விக்கான மாணவர் மக்கள் இயக்கத்தினால் கந்தளாய், திருகோணமலை மற்றும் தம்பலாகாமம் போன்ற பிரதேசங்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

அதில் சிறையில் அடைத்து மாதங்கள் இரண்டு, மாணவர் மக்கள் தலைவர்களை உடனே விடுதலை செய் என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. சிங்கள மற்றும் தமிழ் மொழிகளிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

அகில சந்தீப, வசந்த முதலிகே, சமீர கொஸ்வத்த மற்றும் கோஷிலா ஹன்சமாலி, ஹேசான் ஹர்சன போன்ற மாணவத் தலைவர்களின் படங்களும் பொறிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது .

# பனங்காடு பிரதேச வைத்தியசாலையில் 24 மணிநேரமும் அவசர சிகிச்சை பிரிவு

## சந்திரசேகரம் ராஜனின் முயற்சியால்



அக்கரைப்பற்று பனங்காடு பிரதேச வைத்தியசாலையில் உள்ள அவசர சிகிச்சைப்பிரிவு 24 மணிநேரமும் இயங்க முடியாத நிலையில் உள்ளதையும், மேலும் பல குறைகளுடன் இயங்கிவரும் வைத்தியசாலையின் தேவைகளை உடனடியாக நிவர்த்தி செய்து தருமாறு கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜனுக்கு வைத்தியசாலை அபிவிருத்திகுழுவினர் முன்வைத்த வேண்டுகோளுக்கிணங்க உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது விடயம் தொடர்பில் மாத்தளை மாநகரசபை முதல்வர் சந்தனம் பிரகாஸின் ஏற்பாட்டில் கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சரது அலுவலகத்தில் சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலவை கல்முனை மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் சந்தித்து கலந்துரையாடியதன் பலனாக பனங்காடு பிரதேச வைத்தியசாலை 24 மணிநேரமும் இரவு பகலாக இயங்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

வைத்தியசாலை சீராக இரவு நேரத்திலும் இயங்குவதற்கு வைத்தியர்கள் தங்கியிருக்க முடியாத நிலை நிலவுகிறது. கூடவே வைத்தியர் பற்றாக்குறையும் நிலவுகிறது, இதனை நிவர்த்திசெய்து தருமாறு கோரும் மகஜரை அமைச்சரிடம் கையளித்து கலந்துரையாடினேன் எனவும், வைத்தியசாலையில் இரவில் வைத்தியர் தங்கியிருந்து அவசர சிகிச்சைப்பிரிவை 24 மணிநேரமும் இயக்கவைக்க வேண்டுமெனதான் அமைச்சருக்கு வேண்டுகோள் விடுத்தேன் எனவும் அதனை உடனடியான சுகாதார அமைச்சரின் பிரத்தியேக செயலாளரின் கவனத்திற்கு கொண்டுவந்த அமைச்சர் உடனடியாக வைத்தியரொருவரை நியமிக்க நடவடிக்கை எடுத்தார் எனவும் கூறியுள்ளார் .

மேலும் அன்றே அவசர சிகிச்சைப் பிரிவை 24 மணிநேரமும் இயங்கவைக்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சின் செயலாளருக்கு அமைச்சர் இந்த சந்திப்பின் போது உத்தரவிட்டார்.

அதன்படி அன்றிரவே அவசர சிகிச்சைப்பிரிவு இயங்க ஆரம்பித்துள்ளமை மகிழ்ச்சியளிப்பதாக சந்திப்பின் பின்னர் கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் நீர்ப்பாசன அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் எஸ்.எச். முனசிங்க, சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அசேல குணவர்த்தன, மத்தியமாகாண ஆளுநர் லலித் யு கமகே, மாத்தளை முதல்வர் ச.பிரகாஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

# ஐ.பி.எல். 2021 சிறப்பு விருதுகள் விவரம்




ஐ.பி.எல். தொடரின் இறுதி ஆட்டத்தில் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியை 27 ஓட்டங்களால் வென்று சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது

இந்தத் தொடரில் சிறப்பாக விளையாடிய வீரர்களுக்கு பல்வேறு பிரிவுகளின் கீழ் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அந்த விவரங்கள் –

அதிக ஓட்டங்களை அடித்தவருக்கான செம்மஞ்சள் தொப்பி விருது– ருதுராஜ் கெய்க்வாட் (சென்னை சுப்பர் கிங்ஸ்)

அதிக விக்கெட்டுக்கள் எடுத்தமைக்கான ஊதா தொப்பி விருது – ஹர்ல் பட்டேல் (பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ்)

வளர்ந்துவரும் வீரருக்கான விருது – ருதுராஜ் கெய்க்வாட் (சென்னை)

சிறந்த பிடியெடுப்பு – ரவி பிஸ்னாய் (பஞ்சாப் கிங்ஸ்)

வேகமான ஓட்ட சராசரியைப் பெற்றவருக்கான சூப்பர் ஸ்ட்ரைக்கர் விருது – ஷிம்ரன் ஹெட்மயர் (டெல்லி கப்பிட்டல்ஸ்)

அதிக சிக்ஸர்களை அடித்தவருக்கான விருது – பஞ்சாப் கிங்ஸ் அணித்தலைவர் கே.எல்.ராகுல்

அதிக பவுண்டரிகள் அடித்தவருக்கான விருது – ருதுராஜ் கெய்க்வாட் (சென்னை)

போட்டிகளில் மிகவும் நேர்மையாக நடந்து கொண்டதற்கான விருது – ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி



## கிரெம்லின் டென்னிஸ் தொடர் விலகினார் எம்மா ரடுகனு

இந்த ஆண்டு நடந்த அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியில் பட்டம் வென்று பிரபலமானவர் எம்மா ரடுகனு.18 வயதே ஆன எம்மா ரடுகனு கனடாவில் பிறந்தவர் என்றாலும், பிரித்தானியாவில் குடியேறி அந்த நாட்டிற்காக டென்னிஸ் விளையாடி வருகிறார். தகுதிச் சுற்றின் மூலம் அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடருக்குள் நுழைந்த அவர், அந்த தொடரில் முன்னணி வீராங்கனைகளை வீழ்த்தி பட்டம் வென்றார்.

வரும் 18 ஆம் திகதி மொஸ்கோவில் தொடங்கவிருக்கும் கிரெம்லின் கிண்ண டென்னிஸ் தொடரிலிருந்து விலகுகிறேன் என அவர் அறிவித்துள்ளார்.

‘துரதிருஷ்டவசமாக எனது போட்டி அட்டவணையில் நான் சில மாற்றங்களைச் செய்யவேண்டியுள்ளது. இந்த ஆண்டு மொஸ்கோவில் நடைபெறும் கிரெம்லின் கிண்ணத் தொடரில் நான் பங்கேற்கமாட்டேன். ஆனால், அடுத்த ஆண்டு நடைபெறும் தொடரில் ரஷ்ய ரசிகர்கள் முன் விளையாடுவேன் என நம்புகிறேன்’ என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்தவாரம் நடைபெற்ற இந்தியன் வெல்ஸ் டென்னிஸ் தொடரின் முதல் சுற்றிலே எம்மா ரடுகனு தோல்வியடைந்து வெளியேறிருந்தார். இதனையடுத்து, தனது ஆட்டத்தைச் சீர் செய்துகொள்ள அவர் அவகாசம் எடுப்பதற்காகவே கிரெம்லின் தொடரிலிருந்து விலகியிருக்கலாமென நம்பப்படுகிறது.

## சம்பியனான சென்னை சுப்பர் கிங்ஸ் 20 கோடி ரூபாவையும் கைப்பற்றியது!



ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரின் இறுதி ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, கொல்கத்தாவை தோற்கடித்து நான்காவது முறையாக சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இந்த சீசனில் சம்பியன் பட்டம் பெற்றுள்ள சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு இந்திய நாணய மதிப்பில் 20 கோடி ரூபா பரிசுத்தொகை வழங்கப்பட்டது. இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ள கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணிக்கு 12.50 கோடி ரூபா கிடைத்துள்ளது.



## ஜப்னா கிங்ஸ் அணியின் வெளிநாட்டு வீரராக பப் டு

இந்த ஆண்டு நடைபெறவுள்ள இரண்டாவது லங்கா பிறீமியர் லீக் (எல்.பி.எல்.) தொடரில் விளையாடவுள்ள ஜப்னா கிங்ஸ் அணியின் வெளிநாட்டு நட்சத்திர வீரராக தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான பப் டு பிளெசிஸ் தெரிவாகியுள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இலங்கை கிரிக்கெட் சபை தெரிவுசெய்துள்ள 225 வீரர்கள் இம்முறை வீரர்கள் ஏலத்தில் இடம்பெறவுள்ளதோடு, இதில் 74 சர்வதேச வீரர்களின் பெயர்களும் இணைக்கப்பட்டுள்ளன. வீரர்கள் ஏலம் இம்மாதம் 27ஆம் திகதி நடைபெறவுள்ளதாக இலங்கைக் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. வீரர்கள் ஏலம் நடைபெறுவதற்கு முன்னதாக ஒவ்வொரு அணிகளுக்கும் இரண்டு வெளிநாட்டு வீரர்களைத் தெரிவுசெய்துகொள்ள போட்டி ஏற்பாட்டுக்குழு அனுமதி வழங்கியுள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தன. இதனடிப்படையில், இந்த ஆண்டு எல்.பி.எல். தொடரில் புதிய உரிமையாளர் மற்றும் புதிய பெயருடன் களமிறங்கவுள்ள ஜப்னா கிங்ஸ் அணி, தென்னாபிரிக்க அணியின் முன்னாள் தலைவர் பப் டு பிளெசிஸை, தமது அணியின் வெளிநாட்டு நட்சத்திர வீரராக அறிவிப்பதற்கு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. உலகின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்று வருகின்ற ரி–20 லீக் போட்டிகளில் விளையாடி வருகின்ற 37 வயதான பப் டு பிளெசிஸ், நேற்று இரவு நடைபெற்ற ஐ.பி.எல். தொடரின் இறுதிப் போட்டியில் 86 ஓட்டங்களைப் பெற்று சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு சம்பியன் பட்டத்தை வென்று கொடுப்பதில் முக்கியமான பங்கை வகித்து, இறுதிப் போட்டியின் ஆட்டநாயகன் விருதையும் அவர் பெற்றுக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் ஒரு பாடசாலை கொத்தணியை உருவாக்க முயற்சிக்கிறதா அரசாங்கம்?

## இராதாகிருஷ்ணன் கேள்வி



கொழும்பு மாவட்டத்துக்கு மாத்திரம் பாடசாலை மாணவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசியை வழங்கிவிட்டு பாடசாலையை ஆரம்பிக்க அரசாங்கம் முயற்சி செய்வது மீண்டும் ஒரு பாடசாலை கொரோனா கொத்தணியை உருவாக்குவதற்கா? என்ற கேள்வி உருவாகின்றது. என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

ஹற்றனில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் –

அரசாங்கத்தின் அறிவித்தலின்படி அடுத்து வருகின்ற நாள்களில் கொழும்பு மாவட்டத்தின் பாடசாலை மாணவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசியை வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதுடன் அதனை எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்பதாக நிறைவு செய்யவுள்ளதாகவும் அறிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து ஏனைய மாவட்டங்களுக்குத் தடுப்பூசியை வழங்குவதற்கு அரசாங்கம் எதிர்பார்ப்பதாகவும் தெரியவருகின்றது.

இதனை ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில் மாணவர்கள் அனைவரையும் ஒரே கண்ணோட்டத்தில் பார்க்கவேண்டும். அப்படியானால் அனைத்து மாணவர்களுக்கும் தடுப்பூசியை வழங்கிய பின்பு பாடசாலையை ஆரம்பிக்க வேண்டும்.

அப்படி இல்லாமல் கொழும்பில் இருக்கின்ற மாணவர்களுக்கு ஒரு சலுகையும் ஏனைய மாணவர்களுக்கு ஒரு சலுகையையும் செய்ய முற்படுகின்றமை மிகவும் தவறான ஒரு செயற்பாடாகும்.

நான் முன்னாள் இராஜாங்க கல்வி அமைச்சர் என்ற வகையில் இந்த செயற்பாட்டை பிழையான ஒரு முன் உதாரணமாகவே கருதுகின்றேன். மாணவர்கள் மத்தியில் தேவையற்ற பிரச்சினைகளை இது உருவாக்கும். எனவே அனைத்து மாணவர்களுக்கும் ஒரே தடவையில் அல்லது படிப்படியாக தடுப்பூசியை வழங்கிய பின்பு பாடசாலையை ஆரம்பிப்பதே பொருத்தமானதாக இருக்கும்.

இன்றைய சூழ்நிலையில் ஆசிரியர்கள் ஒரு புறம் தொடர்ச்சியாகப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றார்கள். அவர்களுடைய கோரிக்கைகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

இவ்வாறான ஒரு நிலையில் பாடசாலைகளை ஆரம்பிப்பது என்பது கேள்விக்குறியான சாத்தியமான செயற்பாடாக தெரியவில்லை. ஆசிரியர்களும் அதிபர்களும் இல்லாமல் எவ்வாறு பாடசாலைகளை ஆரம்பிப்பது என்ற கேள்வி எழுகின்றது. எனவே இந்த அனைத்து விடயங்களையும் அரசாங்கம் கருத்தில் கொண்டு மாணவர்களின் நன்மை கருதி சரியான தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றேன். – என்றார்.

## ‘அயன்’ பட பாணியில் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட போதைப்பொருள்!

சுமார் 100 கொக்கேய்ன் போதைப் பொருள் உருண்டைகளை விழுங்கிய நிலையில் இந்நாட்டுக்கு வந்த வெளிநாட்டுப் பெண் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். உகண்டா நாட்டைச் சேர்ந்த பெண் ஒருவர் சுங்க அதிகாரிகளால் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். உகண்டாவில் இருந்து கட்டார் இராச்சியத்தின் டோஹா ஊடாக கட்டார் விமான சேவைக்குச் சொந்தமான எஸ். ஆர். 664 இலக்க விமானத்தில் நேற்று காலை 9 மணி அளவில் குறித்த பெண் இலங்கை வந்துள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் வெளியேறும் பகுதியில் அவரை ஸ்கேன் இயந்திரம் மூலம் சோதனையிட்டபோது இந்த கொக்கேய்ன் தொகை அவரின் வயிற்றில் மறைத்து வைத்து கொண்டு வரப்பட்டுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. பின்னர், தனது வயிற்றில் 100 உருண்டைகள் உள்ளன என அவர் தெரிவித்திருந்த நிலையில் இதுவரை 51 உருண்டைகள் அகற்றப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

## மாணவர்களுக்கு தேவையேற்படின் மூன்றாவது டோஸ் செலுத்தப்படும்

பாடசாலை மாணவர்களுக்கான தடுப்பூசிகள் செலுத்தப்பட்டபின்னர், சுகாதாரப் பரிந்துரைகளுக்கமைய, நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பதற்கான மூன்றாவது டோஸ் தடுப்பூசியைச் செலுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக கொரோனா தடுப்புச் செயலணியின் உறுப்பினரும் விசேட வைத்திய நிபுணருமான பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

நேற்று (வெள்ளிக்கிழமை), வீடியோ தொழில்நுட்பத்தின் ஊடாக இடம்பெற்ற கொரோனா ஒழிப்புச் செயலணிக் கூட்டத்தின் போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக மேலும் கருத்து வெளியிட்ட அவர் –

எதிர்வரும் திங்கட்கிழமை, மேலும் 6 லட்சம் பைஸர் தடுப்பூசிகள் கிடைக்கப்பெறவுள்ளன என்றும் கோரப்பட்டிருந்த தடுப்பூசிகள் தொடர்ந்து கிடைக்கின்றன எனவும் சுட்டிக் காட்டினார்.

அத்தோடு, கொரோனாத் தொற்றுக்கு இலக்காகி உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையை மேலும் குறைத்துக் கொள்வதற்காக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆய்வு செய்யப்பட வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், இதன்போது கருத்து வெளியிட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தொற்றுக்கு இலக்காகும் நோயாளிகள் மற்றும் தற்போது கண்டறியப்படும் பிரதேசங்கள் தொடர்பாக அவதானம் செலுத்தி, அந்த இடங்களைத் தனிமைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

கொரோனா ஒழிப்புக்காக சுகாதாரத் தரப்பினர் பின்பற்றிய வீட்டுத் தனிமைப்படுத்தல் வேலைத்திட்டம், உலக சுகாதார ஸ்தாபனத்தின் விசேட பாராட்டைப் பெற்றுள்ளது என, விசேட வைத்திய நிபுணர் அநுருத்த பாதெனிய இந்தக் கூட்டத்தின் போது அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## விழிப்புலனற்றோரின் படைப்புக்களை உள்ளடக்கிய ‘கடதுராவ’ பிரதமர் மஹிந்தவுக்கு வழங்கிவைப்பு!





சர்வதேச வெள்ளை பிரம்பு தினத்தை முன்னிட்டு விழிப்புலனற்ற நபர்களின் படைப்புகளை உள்ளடக்கிய ‘கடதுராவ’ நூல் வெளியீடு நேற்று (வெள்ளிக்கிழமை) முற்பகல் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் இடம்பெற்றது.

விழிப்புலனற்றோர் புனர்வாழ்வு நம்பிக்கை நிதியத்தின் வெளியீடாக வெளியிடப்படும் இந்நூல் ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விசேட வைத்திய நிபுணர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளேயால் பிரதமருக்கு வழங்கப்பட்டது.

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு விழிப்புலனற்றவர்களின் பங்கேற்புடன் பிற தினங்களில் நடத்தப்படும் வெள்ளைப் பிரம்பு தின பேரணி மற்றும் கொண்டாட்டங்கள் கொவிட்–19 தொற்று நிலைமை காரணமாக இம்முறை ஏற்பாடு செய்யப்படவில்லை.

அதற்குப் பதிலாக விழிப்புலனற்ற படைப்பாளர்களுக்காக நாடளாவிய ரீதியில் சிறுகதை மற்றும் கவிதைப் போட்டிகளை நடத்தி, அதில் தெரிவுசெய்யப்பட்ட படைப்புகளை உள்ளடக்கியதாக ‘கடதுராவ’ என்ற பெயரில் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தைக் குறிக்கும் வகையில் பிரதமர் இதன்போது விழிப்புலனற்ற பட்டதாரிகள் சபையின் தலைவர் சுகத் வசந்த த சில்வாவுக்கு வெள்ளைப் பிரம்பொன்றை வழங்கிவைத்தார்.

இந்த நிகழ்வில் ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விசேட வைத்திய நிபுணர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, பிரதமரின் மேலதிக செயலாளர் சட்டத்தரணி சமிந்த குலரத்ன, ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் சுனேத்ரா குணவர்தன, சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் சந்தன ரணவீர ஆராச்சி உள்ளிட்ட விழிப்புலனற்றோர் சங்கப் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.10.2021இல் வெளியிடப்பெற்றது.